குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா. 6 சி.சி. எண்.216/2018

2023–ம் ஆண்டு ஜீலை 26–ம் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 6 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிவசாமி | ஜாதி | |
| தந்தை பெயர் | ராமசந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.03. மணி,

A2(Thamaraiselvan),A3(Narayanan)A4(Karthickraja), present. A1(Chellathangam) died in charge abated. Advocate Mr.P.Kathiravan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது நங்கவள்ளி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2017ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்த போது மாலை 5.00 மணியளவில் திரு.பழனி (75) த/பெ. பெரமச்சி கவுண்டர், முத்துநாயக்கன்பட்டி என்பவரை பெரமச்சி என்பவர் அழைத்து வந்திருந்தார். அவரை 21.10.2017ல் பிற்பகல் 1.00 மணியளவில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தடி மற்றும் கையால் அவர் குடியிருக்கும் பகுதியில் தாக்கியதாக கூறினார்.

2. அவர் வரும் பொழுது சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1. மார்பின் வலது பக்கம் வலி, 2. இடது பக்க முதுகின் மேற்புறம் வலி. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1,2 ஆகியவை சொற்ப காயங்கள் தான் என்று சான்று வழங்கப்பட்டது. (**பழனி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. அன்றைய தினமே மாலை 5.15 மணியளவில் திருமதி.பழனியம்மாள்(51)

என்பவரை சுகன்யா என்ற அவரது உறவினர் அழைத்து வந்திருந்தார். மேலும் 21.10.2017 பிற்பகல் 3.00 மணியளவில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கையால் அவரை அவரது குடியிருப்பு பகுதியில் தாக்கியதாக கூறினார். அவர் வரும் பொழுது சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1. வலது பக்க முதுகின் மேற்புறம் வலி, 2. இடது பக்க முதுகில் கீழ்புறம் வலி.

4. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1,2 ஆகியவை சொற்ப காயங்கள் தான் என்று சான்று வழங்கப்பட்டது. (**பழனியம்மாளின் விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**5.** அ.சா.1 பழனி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து 4 மணிநேரம் காலதாமதத்திற்கு பின்பு தான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றால் சரிதான். அ.சா.2 பழனியம்மாள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து 2 மணிநேரம் காலதாமதத்திற்கு பின்பு தான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றால் சரிதான்.

6. மேற்படி இரண்டு நபர்களுக்கும் வெளிபுற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களும் வலி இருப்பதாக பொய்யாக சொல்லியிருப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தடியால் ஒருவரை அடிக்கும் போது அவருக்கு சிராய்ப்பு காயம், கன்றிய காயம், அடிப்பட்ட காயம் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 க்கு மேற்படியான காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**. இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: காலை 12.16. மணி,

சாட்சி. சிவசாமி

ஒம்/- S.ஷர்மிளா,<br>
குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>
ஓமலூர்.